
மாதம் இரு முறை வெளிவரும் இலவச இதழ், 07 ஜனவரி 2007 - 20 ஜனவரி 2007, குரல் 07

லண்டன் குரல்
Voice of London Tamils



ரொறன்ரோவில் 2007ம் ஆண்டின் முதற் குழந்தை, தமிழ் குழந்தை. பெற்ற பூரிப்புடன் தாய் மேரி யூலியன் பெனடிக்ற் படத்தில் உள்ளார். சுகப்பிரவசமான தனது மகனை ஒரு மருத்துவராக்க விரும்புவதாக அவர் தெரிவித்தார். புததாண்டு மலர்ந்து சில விநாடிகளில் மருத்துவமனைக்கு வந்த மேரி புதிய ஆண்டின் 40வது விநாடியில் தன் மகனைப் பெற்றெடுத்தார். தந்தை தனரட்னம் பற்றிக்.

# இலங்கை White List இல் இருந்து நீக்கப்பட்டது, தஞ்சம் வழங்கப்படுவதற்கான Blank Cheque அல்ல.

## சட்ட வல்லுனர் ராஜேஸ்குமார் சிறப்புப் பேட்டி



சட்ட வல்லுநர் ராஜேஸ்குமார் சட்ட ரீதியாக பிரதிநிதித்துவம் செய்த வழக்கில் கடைசிக் கட்டத்தில் உள்துறை அமைச்சு இலங்கையை White List இல் இருந்து நீக்கி வழக்கை முடிவுக்கு கொண்டு வந்தது. ஆனால் உள்துறை அமைச்சின் இந்த முடிவு பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோருவதற்கோ அல்லது அரசியல் தஞ்சம் வழங்கப்படுவதற்கோ வழங்கப்பட்ட, பணமாக்கக் கூடிய வெற்றுக் காசோலை அல்ல என்கிறார் சட்ட வல்லுனர் ராஜேஸ்குமார்.

பிரித்தானிய உள்துறை அமைச்சு இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கியதாக அறிவித்த செய்தி இலங்கைத் தேசிய பத்திரிகைகளிலும் உடனடியாக தலைப்புச் செய்தியாக வெளிவந்து இருந்தது. ஆனால் இச்செய்திகளின் உள்ளடக்கம் மக்களை தவறான வழிக்கு திசை திருப்பி விட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்செய்தி வெளிவந்தவுடன் மேற்கு நாடுகளுக்கு ஆட்கடத்தும் முகவர்கள் பிரித்தானியாவுக்கு அவர்களை கொண்டு வந்து சேர்க்கும் கட்டணத்தை ஐந்து லட்சம் இலங்கை ரூபாய்களால் அதிகரித்து உள்ளதாக இலங்கையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையை White List இல் சேர்த்ததும் அதனை தொடர்ந்தும் White List இல் இருந்து நீக்காமல் வைத்திருப்பதும் நியாயமற்றது என்று உள்துறை அமைச்சுச் செயலாளருக்கு எதிராக தமிழ் இளைஞர் கெ (பாதுகாப்பு காரணங்களுக்காக பெயர் வெளியிடப்படவில்லை) தொடுத்த வழக்கிலேயே உள்துறை அமைச்சு பணிந்துள்ளது. Nationality, Immigration and Assylum Act 2002, Section 94 படி உள்துறை அமைச்சுச் செயலாளருக்கு பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து ஒரு நாட்டை நீக்கி விடுவதற்கும் அதிகாரம் இருந்தது. 2003ல் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் கீழ்

S94 (5) provides: (5) The Secretary of State may by order add a State, or part of a State, to the list in subsection (4) if satisfied that-(a) there is in general in that State or part no serious risk of persecution of persons entitled to reside in that State or part, and(b) removal to that State or part of persons entitled to reside there will not in general contravene the United Kingdom's obligations under the Human Rights Convention.

S94 (6) provides: (6) The Secretary of State may by order remove from the list in subsection (4) a State or part added under subsection

இலங்கையில் நிலைமைகள் மோசமடைந்த நிலையிலும் உள்துறை அமைச்சுச் செயலர் அந்த அதிகாரத்தினை பயன்படுத்தத் தவறி இருந்ததே அவருக்கு எதிராக இந்த சவாலை மேற்கொள்வதற்கு காரணமாக இருந்தது என சட்ட வல்லுனர் ராஜேஸ்குமார் லண்டன் குரலுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

இவ்வழக்கிற்காக 1000க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு 50 பக்கங்களிற்குள் அது சாரம்சப்படுத்தப்பட்டு முழுப் பலத்துடன் ராஜேஸ்குமார் உள்துறை அமைச்சை



## ரெலோ தலைவர் சிறிகந்தா லண்டனில்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிகந்தா குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டன் வந்துள்ளார். இவர் காரைநகர் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்துபசார நிகழ்விலும் கலந்து கொண்டார். காரைநகர் முன்னர் ரெலொவின் கோட்டையாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

லண்டனில் உள்ள முன்னாள் தமிழீழ விடுதலை இயக்க (ரெலொ) உறுப்பினர்களை சந்தித்து உரையாடி வரும் சிறிகந்தா அவர்களை இணைத்து ரெலோவுக்கான லண்டன் கிளை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அண்மையில் படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் இடத்தை இவரே நிரப்ப உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கி முனையில் தமிழரை மிரட்டி 70,000 கொள்ளை

### வூட் கிறீன் பூட்சில் சம்பவம்

வூட் கிறீன் பூட்ஸ் ஸ்ரோரின் துணை முகாமையாளராக இருந்த புஸ்பராஜா என்ற இளைஞரை துப்பாக்கி முனையில் மிரட்டி இனம்தெரியாத நபர்கள் 70,000 பவுணுக்கும் அதிகமான பணத்தை திருடி உள்ளனர். பொக்ஸிங் டே தினமான டிசம்பர் 26 மாலை ஐந்து மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவ நேரம், ஸ்ரோர் பூட்டப்பட்ட பின் ரில்களில் இருந்து பணத்தை சேகரித்துக் கொண்டு கணக்கை முடிப்பதற்காக cash officeக்கு புஸ்பராஜா செல்லத் தயாரானர். அப்போது அங்கு முகமூடி அணிந்து பதுங்கி இருந்த சிலர் பாய்ந்து புஸ்பராஜாவின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி அவரைக் கட்டிப்போட்டு விட்டு பணத்தை கொள்ளை இட்டுக் கொண்டு தப்பிச் சென்றனர்.

07 ஜன 07 - 20 ஜன 07, குரல் 07

லண்டன் குரல்

## தொடரும் தஞ்சம் கோருவோரின் அவலம்

தொண்ணூறுகளில் வேகமடைந்த புலம்பெயர்வின் போது பிரித்தானியாவிற்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். இந்த அகதித் தமிழர்களை நம்பி சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், தமிழ் அமைப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் தோன்றித் தம்மை வளர்த்துக் கொண்டன. அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தஞ்சம் கோருபவர்களுக்கு ஒதுக்கிய நிதி மற்றும் வளங்களில் பெரும்பங்கை தாமே நுகர்ந்தன.

மேலும் அரசியல் நலனுக்காக கட்சிகள் தஞ்சப் பிரச்சினையை கையிலெடுப்பதும் வலதுசாரி ஊடகங்கள் அதனை ஊதிப் பெருப்பிப்பதும் தஞ்சம் கோருவோர் மீது மேலும் மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தியது. தஞ்சம் கோருவோருக்கான நிதி மற்றும் வளங்களில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதும் புற்றீசல்கள் போல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், மற்றும் சமூக அமைப்புகளும் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை கண்டுகொள்ள மறுக்கின்றனர். Green Foamஇல் தாம் நினைத்த தொகையை எழுத முடியாமல் இருப்பதால், தாம் நினைத்தபடி Fresh Application போட முடியாமல் இருப்பதால் சட்டத்தரணிகள் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை சந்திக்க விரும்புவதில்லை.

அப்படியான நிலையில் உள்துறை அமைச்சுக்கு சவால் விடுத்து இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்கியதற்கு ராஜேஸ்குமார் பாராட்டப்பட வேண்டியவரே. இவ்வாறு form நிரப்பிக் கொடுக்கும் சட்டத்தரணிகளில் இருந்து மாறுபட்டு எமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்ற உணர்வு சில சட்ட நிபுணர்கள் மத்தியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

ஆசிரியர்: த ஜெயபாலன்
ஆசிரியர்குழு: Dr பி சிவக்குமார், ஆர் சுரேஸ்குமார், ஜோ ஜெயவேந்தன்
நிர்வாகம்: ரி கொன்ஸ்ரன்ரைன்

Voice of London Tamils
P O Box 35806
London, E11 3JX, UK

செய்தித் தொடர்பு: 020 8279 0354
நிர்வாகத் தொடர்பு: 079 1944 4994

'லண்டன் குரல்' பத்திரிகை Thesam Publication Ltd இனால் மாதமிரு முறை வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் 'லண்டன் குரல்' பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல் மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

## நியூஹாம் பொங்கல்

நியூஹாம் கவுன்சிலால் ஆண்டு தோறும் ஏற்பாடு செய்யப்படும் பொங்கல் விழா ஜனவரி 15ல் வழமை போல் ஹைஸ்ரீற் நோத்தில் உள்ள மஹாலக்ஸ்மி ஆலயத்திற்கு முன் இடம்பெறவுள்ளது. சர்வதேச தமிழர் விழாவான பொங்கல் விழா மேற்கு நாடுகளில் நியூஹாம் நகரில் மட்டுமே உத்தியோகபூர்வமாக உள்ளாட்சி மன்றத்தின் அனுசரணையுடன் கொண்டாடப்படுகிறது என்று பெருமையுடன் கூறினார் கவுன்சிலர் போல்.

## மூவருக்கு வழக்கு

வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த மூன்று தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்கு தொடர்கிறது. ஸ்னேஸ்புறுக் கிறவுன் நீதிமன்றத்தில் இவ்வழக்கு கடந்த ஆண்டு டிசம்பரில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜனவரி 10க்கு ஒத்தி வைக்கப்பட்டது. கடந்த ஆண்டு ஒருவரைக் கடத்தியதற்காக பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இவ்விளைஞர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.


## பனிப்போரில் தீபம்

அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற தீபம் தொலைக்காட்சி அங்கு பனிப்போரில் சிக்கியுள்ளது. தீபத்தின் பெரும்பான்மை பங்குகளைப் பெற்றுக்கொண்ட மலேசிய நிறுவனம் அவுஸ்ரேலியாவின் சிகரம் தொலைக் காட்சியையும் வாங்கி இருந்தது. தற்போது மலேசிய நிறுவனம் சிகரத்தை நிறுத்தியதைத் தொடர்ந்து சிகரம் வேறு பெயரில் இயங்க ஆரம்பித்து உள்ளது. அதனைத் தொடர்ந்தே இப்பனிப்போர் ஆரம்பித்தது. (செய்தி அடுத்த இதழில்.)

## இலங்கை White List இல் இருந்து நீக்கப்பட்டது, .....

1ம் பக்கத் தொடர்ச்சி

எதிர்கொண்டுள்ளார். சைமன் கொக்ஸ் (படம்) (Simon Cox - Doughty Street Chambers), இயன் லுயிஸ் ஆகிய இரு சிறந்த சட்டவாதிகள் (Baristers) இவ்வழக்கிற்கு உறுதுணையாக இருந்துள்ளனர். சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் நிபுணத்துவ அறிக்கையும் இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது.



இவ்வழக்கின் முடிவால் இலங்கையில் இருந்து தஞ்சம் கோரு பவர்களின் விண்ணப்பத்தை பரிசிலிக்கும் குடிவரவு அலுவலர் தஞ்சம் கேட்பவர் ஒரு பாதுகாப்பான நாட்டில் இருந்து தஞ்சம் கோருகிறார் என்ற விம்பத்துடன் முடிவெடுக்க மாட்டார் என்று கூறும் ராஜேஸ்குமார் ஓர்கிங்ரன் துரித தஞ்ச பரிசீலனை என்ற கெடுபிடிகளும் பெரும்பாலும் குறையும் என்றும் தெரிவித்தார். இது ஒரு சட்ட நுணுக்கத்துடன் சம்பந்தப்பட்ட விடயமே.

இலங்கையில் பெப்ரவரி 2002ல் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் கைச்சாத்திட்டதை அடுத்து யூலை 22 2003ல் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் பிரித்தானிய உள்தறை அமைச்சு சேர்த்துக் கொண்டது.


இந்த வழக்கில் 3 அம்சங்களின் அடிப்படையில் ராஜேஸ்குமார் தனது நியாங்களை முன் வைத்துள்ளார்.

1. கே யின் தஞ்ச விண்ணப்பத்தை அடிப்படையற்றது clearly unfounded என்று நிராகரித்தது சட்டத்தக்கு மாறானது.
2. இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் 22 யூலை 2003ல் இணைத்தது நியாயமற்றது.
3. இலங்கை நிலைமைகள் மோசமானது என்று தெரிந்தும் தனது அதிகாரத்தை பாவித்து அதனை மறுபரிசீலனை செய்து இலங்கையை அப்பட்டியலில் இருந்து நீக்காதது நியாயமற்றது.

இந்த வழக்கின் மிக அடிப்படையான அம்சம் இலங்கையில் மனித உரிமைகள் பற்றியது என்று குறிப்பிட்ட ராஜேஸ்குமார், இலங்கையில் ஒரு குறிப்பிட்ட சனத்தொகைக்கு பொதுவாக ஆபத்து உள்ளது என்பது நிரூபிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்குவதற்கான பிரதான வாதம் இரண்டு என அவர் கீழுள்ள விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

1. யுத்த நிறத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தும் வடக்க கிழக்கில் விடுதலைப் புலிகள் மக்களை தங்கள் சர்வதிகார ஆட்சியில் வைத்திருக்கிறார்கள். அங்கு மக்களின் அரசியில் உரிமைகள் மறுக்கப்படுகிறது, அரசியல் படுகொலைகள் இடம்பெறுகிறது, சிறுவர்கள் பலவந்தமாக இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனர், எனவே இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருப்பவர்கள் பொதுவாக மனித உரிமை மீறல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகிறார்கள்.
2. அடுத்து இலங்கை அரச படையினரின் சித்திரவதைகள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்கிறது. அதனால் இலங்கையில் உள்ளவர்கள் பொதுவாக மனித உரிமை மீறல்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகிறார்கள்.



Home Office

Immigration and Nationality Directorate

8 December 2006

To: Asylum Processes Stakeholder Group

**NON SUSPENSIVE ASYLUM APPEALS: SRI LANKA**

I am writing to inform you of a change which is to be made to the list of countries designated for non-suspensive appeals under Section 94 of the 2002 Nationality, Immigration and Asylum Act.

Ministers have decided in the light of the deterioration in the situation in Sri Lanka, to remove it from the list of designated countries. An Order giving effect to this decision is being laid in Parliament on 12 December and will come into force on 13 December.

The escalation in violence in Sri Lanka has not affected all parts of the country to the same degree and we are examining whether it is appropriate to re-introduce in the near future a partial geographic designation for the purposes of non-suspensive appeal. We are also clear that the situation in Sri Lanka is not such that we should cease returns or grant leave to remain in the UK to Sri Lankans on the basis of the general situation alone. Each asylum and human rights claim made by Sri Lankans will, as now, continue to be considered on its individual merits. This will include continuing to certify claims from Sri Lankans which are clearly unfounded on a case-by-case basis while ensuring that those individuals in genuine fear of persecution receive the protection they need.

Yours faithfully

ANDREW SAUNDERS
Asylum & Appeals Policy Directorate

2004 டிசம்பரில் இலங்கையின் யுத்த சூழல் காரணமாக அரசியல் தஞ்சம் கோரிய கேயின் தஞ்ச விண்ணப்பம் ஓர்கிங்ரன் துரித அரசியல் தஞ்சப் பரிசீலனையில் clearly unfounded அடிப்படையற்றது என்று என்று நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் கே சட்ட வல்லுநர் ராஜேஸ்குமாரின் Seudamores Solicitors சட்ட நிறுவனத்தை அணுகினார். Clearly unfounded என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டதால் கே க்கு மேன்முறையீட்டு உரிமை இருக்கவில்லை. நீதிமன்றத்துக்குச் செல்ல Judical Review சட்ட மீளாய்வு செய்வதே ஒரேவழியாக இருந்தது.

இந்நிலையில் இலங்கையை White List இல் சேர்த்ததும் அதனை தொடர்ந்தும் White List இல் இருந்து நீக்காமல் வைத்திருப்பதும் நியாயமற்றது என்ற அடிப்படையில் உள்துறை அமைச்சின் முடிவுக்கு சவால் விடுவதே பொருத்தமானது என தான் கருதியதாக ராஜேஸ்குமார் தெரிவித்தார். முதலில் உள்துறை அமைச்சு மேன்முறையிட்டு உரிமை தருகிறோம் வழக்கை முழுவதுமாகக் கைவிடுமாறு கேட்டதாகக் கூறிய ராஜேஸ்குமார் அதனை தாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் உள்துறை அமைச்சுக்கு எதிரான வழக்கைத் தொடர்ந்ததாகக் கூறினார்.

அப்படி இருந்தும் உள்துறை அமைச்சு கேக்கு மேன்முறையீட்டு உரிமையை வழங்கி திருப்திப்படுத்த முயன்றது. ஆயினும் தங்கள் நிலைப்பாட்டில் ராஜேஸ்குமாரும் கேயும் உறுதியாக நின்று போராடினர்.

மாரச் 29 2005ல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கை உள்துறை அமைச்சு பல்வேறு காரணங்களைக் காட்டி பின்னடிக்க முறபட்டுள்ளது. இறுதியாக இந்த வழக்கு 13, 14 யூலை 2006ல் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு சில நாட்களின் முன் இலங்கையை பாதுபாப்புப் பட்டியலில் இருந்து நீக்குவது பற்றி மீளாய்வு செய்வதற்காக உள்துறை அமைச்சு ஒரு மாதத் தவணையை தங்களிடம் கேட்டதாக ராஜேஸ்குமார் தெரிவித்தார். தாங்கள் அதற்கு ஒத்துக் கொண்டோம் என்றும் ஆனாலும் ஒரு மாதம் வரை எந்தவித முடிவையும் உள்துறை அமைச்சு தங்களுக்கு தெரியப்படத்தத் தவறியதால், இதனை நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தி மேன்முறையீட்டுக்கான திகதியை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டார். இறுதியில் டிசம்பர் 12 - 13 2006ல் உயர் நீதிமன்றுக்கு இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட திகதி குறிக்கப்பட்டது. இந்நிலையில் டிசம்பர் 8ல் தாங்கள் இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்குவதாக உள்துறை அமைச்சின் Asylum & Appeals Policy Directorate, Andrew Saunders தெரிவித்ததாக ராஜேஸ்குமார் தெரிவித்தார்.

உள்தறை அமைச்சின் இந்த முடிவு கேயின் உள்துறை அமைச்சுச் செயலாளரிற்கு எதிரான இவ்வழக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

உண்மைகள் உறங்குவதில்லை.

# தமிழ் பா. உ க்களின் கொலையில் அரச படைகள் தொடர்பு

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்

படுகொலை செய்யப்பட்ட தமிழ் பா உ க்களின் கொலையுடன் இலங்கை அரசபடைகளுக்கு தொடர்பு இருப்பதையே கிடைக்கப்பெற்ற குறியீடுகள் காட்டுவதாக Teachers for Human Rights (UTHR) மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு குற்றம்சாட்டி உள்ளது. இலங்கையில் சுயாதீனமாகச் செயற்படும் ஒரே அமைப்பாக இவ்வமைப்பே சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் நடுப்பகுதியில் வெளிவந்துள்ள இம்மனித உரிமைகள் அறிக்கை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிலைமையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளாரா என்ற கேள்வியையும் எழுப்பி உள்ளது. மூதூர், சம்பூர், வாகரை என 1980க்களில் செய்யப்பட்டது போன்று அரசு தமிழ் மக்களை அவர்களது இடங்களில் இருந்து வெளியேற்றுவதாகவும் அவ்வறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

இதேபோல் தமிழீழமே தீர்வு என அறிவித்துள்ள வி.புலிகளின் தலைவர் பிரபாகரனே தற்போது ஏற்பட்டுள்ள மோசமான யுத்த நிலைக்கு காரணம் என அவ்வறிக்கை வி.புலிகளையும் சாடியுள்ளது.

மேலும் நோர்வே உட்பட சர்வதேச சமூகத்தையும் இவ்வறிக்கை கண்டித்து உள்ளது. வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டதை கண்டித்துள்ள UTHR அறிக்கை இலங்கையில் சிறுபான்மையினருக்கு இடமில்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 27ல் புளொட்டின் சிரேஸ்ட தலைவரான கனபதிப்பிள்ளை பாக்கிய ராஜாவும் உதவியாளர் ராஜரட்ணம் ராஜேந்திரன் என்பவரும் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். பாக்கியராஜா வட கிழக்கு பிரிக்கப்படுவதை எதிர்த்த கிழக்கில் மக்கள் செல்வாக்குள்ள ஒருவர். இவரது படுகொலையை அரச உளவுப்பிரிவே மேற்கொண்டதாக புளொட் குற்றம்சாட்டியுள்ளது.

# புலி ID Card



ஜனவரி 1ல் வி.புலிகள் தங்கள் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தி உள்ளனர். வி.பு தலைவர் தனதும் முதலாவதுமான அடையாள அட்டையை பெற்றுக்கொண்டார். (படம்) இலங்கை அரசினால் தமிழர்கள் அனுபவிக்கும் அ.அ கெடுபிடி நிலையில் புலிகள் தாமும் அ.அ யை அறிமுகப்படுத்தி உள்ளனர். இது தமிழ் மக்களுக்கு இரட்டிப்பு அதிகாரக் கெடுபிடியை ஏற்படுத்தும் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரித்தானிய அரசு இவ்வகையான அடையாள அட்டையை அறிமுகப்படுத்த பல ஆண்டுகளாக முயற்சித்த போதும் சிவில் உரிமை அமைப்புகள் அதனை கடுமையாக எதிர்த்ததால் அதனை உடன் அமுல்படுத்த முடியவில்லை. அதிகர இறுக்கத்தின் ஒரு வடிவமாகவே அடையாள அட்டை உள்ளது.


# ஈஸ்ட்ஹாம்க்குள் நுழையத் தடை

ஐந்து தமிழ் இளைஞர்களுக்கு ஈஸ்ட்ஹாமுக்குள் நுழையத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட Anti Social Behaviour - சமூகப் பிறள்வான நடத்தை விதிகளுக்கமையவே இவர்களுக்கு நடமாட்டத்திற்கான தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்த புதிய விதியின் கீழ் துஸ்ட செயல்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

Anti Social Behaviour விதிகளுக்கு ஆதரவாக முன்னின்று செயற்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் நியூஹாம் குறிப்பிடத்தக்கது. பிரித்தானியாவில் இவ்வுள்ளாட்சிப் பிரிவிலேயே அதிகமான தமிழ் மக்கள் வாழ்வதாகக் நம்பப்படுகிறது. அண்மைக்காலங்களில் தமிழ் இளைஞர்களின் வன்முறைக்கு பெயர் பெற்ற இடமாக ஸ்கொட்லன் யாட் அறிவித்த உள்ளாட்சி மன்றங்களில் நியூஹாம் முக்கியமானது.

## சதாம் உஷேனின் தூக்குத் தண்டனை:

# அமெரிக்கா உலகுக்கு வழங்கியுள்ள எச்சரிக்கை




### வ அழகலிங்கம்

ஈராக்கில் உள்ள துஜைல் நகரில் 1982ல் ஷியா பிரிவு முஸ்லிம்கள் 148 பேரை, (தன்னைக் கொல்லச் சதிசெய்தார்கள் என்பதன் பேரில்) கொன்ற குற்றத்திற்காகவே, சதாம் உஷேனுக்கு ஈராக் நீதிமன்றம் விதித்த தூக்கு தண்டனையை டிசம்பர் 26-ந் தேதி மேல்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது. அத்துடன் அவருக்கு 30 நாட்களுக்குள் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

ஹஜ்(பக்ரீத்) பண்டிகைக்கு முன் சதாம் உஷேனை தூக்கில் போட வேண்டும் என்பதே புஸ்சினதும் அவரது பொம்மை ஆட்சியாளர்களான ஈராக் பிரதமர் நூரி அல்-மாலிகியின் முடிவாகும். அரபுச் சட்டங்களின் ஹஜ்(பக்ரீத்) தியாகப் பண்டிகையின் போது தூக்கிலிடுவது சட்டவிரோதமாகும். சதாம் உஷேனைத் தூக்கிலுடுவதற்காக சட்ட அதிகாரிகளை உலங்கு ஊர்த்திமூலம் நடுராத்திரியில் ஏற்றி இறக்கி, ஈராக்கியச் சட்டத்தையே இரவோடு இரவாக மாற்றி எழுதினார்கள். ஏனென்றால் சதாம் உஷேனை அமெரிக்க ஏகாதிபத்தியம் கொல்லவில்லை. ஈராக் மக்களே கொன்றார்கள் என்று உலகுக்குக் காட்ட வேண்டும். ஈராக் அதிகாரிகளிடம் வெருட்டிக் கையெழுத்துகளும் வாங்கப்பட்ட செய்தியை ஊடகங்கள் எழுதியுள்ளன.

அதற்கு ஏற்றபடிக்கு, ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்புச் சிறையில் இருந்த சதாம் உஷேனை அமெரிக்க ராணுவம் 29 டிசெம்பர் 2006ல் ஈராக் பொம்மை அரசிடம் ஒப்படைத்தது. இதைத்தொடர்ந்து, சதாம் உசேன் 30 ந் தேதி காலை பாக்தாத் நகரில் தூக்கில் போடப்பட்டார். சதாம் உஷேன் கடைசிமட்டும் அந்த நீதிமன்றங்களின் சட்பூர்வத் தன்மையை நிராகரித்தார். தூக்குக்குத் தயாரான நிலையிலும் தளராமல் கலங்காமல் மன உறுதியுடன், எதிரிகள் வீழ்க! பலஸ்தீனம் நீடு வாழ்க! பலஸ்தீனம் முழு அரபு மக்களுக்கும் சொந்தமானது! கடவுளே அனைத்துக்கும் பெரியவன்! என்று கூறியுள்ளார்.




சதாம் உசேன் தூக்கில் போடப்பட்டது பற்றிய தகவல் வெளியானதும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள் என்ற செய்தியை மேற்குலக ஊடகங்கள் தெரிவித்தன.

அதேசமயம் சுன்னி முஸ்லிம்கள் சதாம் உசேனை தூக்கில் போட்டதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். சதாம் உசேனின் சொந்த ஊரான திக்ரித்தில் பதட்டம் நிலவுவதால் 4 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. நாடு முழுவதும் அமெரிக்க படையினரும், ஈராக் ராணுவத்தினரும் அதிகபட்ச உஷார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர்.


ஈராக்கில் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இக்குண்டு வெடிப்புகளுக்கு சதாம் உசேன் ஆதரவாளர்களான சுன்னி பிரிவு முஸ்லிம்களே காரணம் என்று மேற்குலக ஊடகங்கள் பிரச்சாரம் செய்கின்றன. உண்மையில் சுன்னி - ஷியா முஸ்லீங்களிடையே மேலும் பிரிவினையை ஏற்படுத்துவதற்காக பிரித்தானிய அமெரிக்க உளவு நிறுவனங்களின் சதிகளின் தொடர்ச்சியே இந்தக் குண்டு வெடிப்புகளாகும். இந்த சதிகார ஆத்திர மூட்டல்களினால் மேலும் வன்முறை சம்பவங்கள் வெடிக்கும் அபாயம் நிலவுகிறது.

இதற்கிடையே, ஆத்திரமூட்டல்களைச் செய்துவிட்டு வன்முறையை கைவிடுமாறு சுன்னி பிரிவு முஸ்லிம்களுக்கு அமெரிக்க ஏஜண்டான ஈராக் பிரதமர் நூரி அல்-மாலிகி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஈராக்கை மறுசீரமைக்க அப்பாவி சுன்னி முஸ்லிம்கள் முன்வர வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் உட்பட்ட அனேக மேற்குலக நாடுகள் சதாம் உஷேனின் தூக்குச் சம்பந்தமாக ஏதும் உத்தியோகபூர்வ அறிக்கைகளை வெளிவிடவில்லை. இத்தாலியப் பிரதம மந்திரி தூக்குத் தண்டனை பிழையானதென்று கூறியுள்ளார். அதிகமானவர்கள் தூக்குத் தண்டனை பிழை என்று கூறிய போதும் சதாம் உஷேனின் தூக்கின்பின் ஈராக்கில் ஜனனாயகம் வரும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கூற்றை மீளவும் கூறியுள்ளனர். லிபிய ஜனாதிபதி தூக்குத் தண்டனையைக் கண்டித்ததோடு லிபியாவில் 3 நாட்களுக்கு துக்கதினத்தைப் பிரகடனப்படுத்தினர்.

தொடர்ச்சி 6ம் பக்கத்தில்

# சாத்தான்களின் கூடாரமாகும் தேவாலயங்கள்



தற்போது புற்றீசல்களைப் போல் தமிழ் கிறிஸ்தவ ஆலயங்கள் ஆரம்பமாகின்றன. சென்ற மாதம் ஈஸ்ற்ஹாம் பகுதியில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றுக்கு ரைப்பிங் படிக்கச் சென்ற 18 வயதுடைய பெண்ணை 45 வயதையொட்டிய பாஸ்டர் ஒருவர் காதலித்து மணமுடித்துவிட்டதாக அப்பகுதியில் பெரிய கதை. பாஸ்டர் இளம் பிள்ளையை brain wash செய்துவிட்டார் (அது தானே தொழில்) என்று ஒரு குழுவும் இல்லை இல்லை இக்காதல் திருமணத்தில் தானே முடிந்தது என்று இன்னொரு குழுவும் சரியாக feel பண்ணுகிறார்கள். இந்த பிரச்சனையால் சம்பந்தப்பட்ட தேவாலயம் இரண்டாகிவிட்டதாக கேள்வி.

அது ஒருபுறம் இருக்க ஏன் இந்த ஆலயங்கள் செயாரிட்டி கொமிஷனில் பதிவு செய்யப்படவில்லை என்று இன்னொரு சாரார் கேள்வி தொடுக்கின்றார். இந்த போதகர்கள் தமிழ் தொலைக்காட்சிகளிலும் றேடியோக்களிலும் பிரச்சாரம் செய்வதற்கும் மற்றும் ஆலயங்களை வாங்குவதற்கும் பொது மக்களிடமே பணத்தை வசூலிக்கின்றனர். இப்பணம் மதம் என்ற போர்வையிலே வீண் விரயம் செய்யப்படுகின்றது.


எது எப்படி இருப்பினும் இந்த பாஸ்டர்கள் யாரும் பொதுமக்களை கட்டாயப்படுத்தி பணம் வாங்கியதாக குற்றச்சாட்டுக்கள் ஏதும் முன்வைக்கப் படவில்லை. ஆக மொத்தமாக இவர்கள் மக்களின் பலவீனத்தையும் கஸ்ரத்தையும் தமக்கு சாதகமாக பயன் படுத்துகின்றார்கள். இந்த நிலமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென்றால் கத்தோலிக்க, புரஸ்டாந்து மற்றும் மெத்தடிஸ்ட் போன்ற பழமையான ஏற்கனவே ஆழமாக நிர்மானிக்கப்பட்ட ஆலயங்களின் தமிழ் ஊழியர்கள் மிகவும் துரிதமாக செயல்பட வேண்டும்.

மக்கள் தமக்குள்ள ஆன்மீக நம்பிக்கையை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்துவது இயற்கை. அதில் பிரச்சனை ஒன்றும் இல்லை. ஆனால் இந்த நிலமையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தங்களை போதகர்களாகவும் தமது மனைவியை போதகியாகவும் காட்டி தாங்கள் ஏதோ நோய்களை குணப்படுத்தி கஸ்ரத்தை நீக்கும் கடவுளின் ஏஜன்டுகள் என்று கூறிக்கொள்ளும் கோமாளிக் கூட்டத்தை மக்கள் இனம் காண வேண்டும்.

இன்று எத்தனையோ குடும்பங்கள் பிரிவதற்கு இந்த சாத்தான் போதகர்கள் வழிவகுத்துள்ளார்கள். எத்தனையோ குடும்பங்களில் கணவன் மனைவிக்குள் ஏற்படும் சிறிய பிரச்சனைகளை பயன்படுத்தி அவர்களின் தனிப்பட்ட பிரச்சனைக்குள் தலையிட்டு அக்குடும்பங்களை பிரித்து வைத்துள்ளார்கள். இவ்வாறான பிரிவினைகளால் பல தமிழ் குடும்பங்கள் தற்கொலை, கொலை செய்யும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளன.

தன்னுடைய ஆன்மீக நம்பிக்கையை யாராவது ஒருவன் இன்னொருவனிடம் நியாயப்படுத்தினால் அல்லது பறைசாற்றினால் அல்லது மதம் மாறும் படி கட்டாயப்படுத்தினால் அவன் ஒரு ஆன்மீகவாதியாக கடைசிவரை இருக்க முடியாது. அவன் ஒரு வியாபாரி. Just a salesman.

## தமிழர் சுயாட்சிக் கழகத்தின் ஸ்தாபகர் வி நவரத்தினம் கனடாவில் காலமானார்



தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகருள் ஒருவரும், தமிழர் சுயாட்சிக் கழகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் காவலூர் எம். பி.யுமான வி.நவரெத்தினம் டிசம்பர் 22ல் கனடா மொன்றியலில் காலமானார். அன்று தமிழரசுக் கட்சியின் மூளையென மதிக்கப்பட்ட இவர் காலமாகும் போது வயது 97.

தமிழினம் தன்மானமுள்ள, சம அந்தஸ்த்துள்ள சுதந்திர இனமாக வாழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கென தனியானதோர் அரசியல் கட்சி அத்தியாவசியம் எனக்கருதி முதலில் தமிழரசுக் கட்சியை உருவாக்குவதில் தந்தை செல்வாவுக்கு வலக்கரமாய் இருந்து செயல்பட்டவர் வி.நவரெத்தினம்.

ட்டலி சேனநாயக்கா அறிமுகம் செய்த ஆட்பதிவுச் சட்ட மூலம் இரட்டைக் குழல் துப்பாக்கியைப் போன்ற இச்சட்ட மூலம் தமிழ் மக்களைத் துன்புறுத்தும் நோக்குடன் குறிவைக்கப்படுகிறது என அன்றே கூறியவர் வி நவரத்தினம். அதாவது இச்சட்டத்தின் பிரகாரம் இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரும் ஆட்பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டபின்னர் அவர்களுக்கு வழங்கப்படும் புகைப்படத்துடனான அடையாள அட்டையினை தங்களுடன் எப்பொழுதும் கொண்டு திரிய வேண்டும். அவர் அன்று கூறியது இன்று நிஜமாகிவிட்டது. இச்சட்ட மூலத்தை எதிர்க்கட்சியினர் கூட ஆமோதித்து வாக்களித்த போது அரசில் இணைந்திருந்த தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் எதிர்த்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. அவர் தான் வி நவரத்தினம். இதனால் மறுநாளே அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.

இன முரண்பாடுகள் கூர்மையடைந்து தமிழ், சிங்கள இனங்கள் இணைந்து வாழ முடியாதென்ற நிலைப்பாடு இனப்படுகொலைகளின் மூலம் ஊர்ஜிதமாகியபோது தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆழும் நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழர் சுயாட்சிக் கழகத்தை வி.நவரெத்தினம் உருவாக்கினார். ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டு, சமாதானப் பேச்சுக்கள் வெறும் பசப்பு வார்த்தைகளாகி தமிழினம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டும் சித்திரவதைப் படுத்தப்பட்டும் வருவதைக் கண்டு விரக்தியுற்று போராட்டத்தின் மூலமே தமிழினம் தன்னுரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென்ற தீர்க்கதரிசனத்துடன் விடுதலைப் போராட்டத்துக்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தவர். இதன் மூலம் தமிழீழ இயக்கம் உருவாக வித்திட்ட பெருமை இவரையே சாரும். (தகவல்: தேனீ)

## ஊருக்குத்தான் உபதேசம் உமக்கில்லை சுதுமலைக் கவிஞரே

வி.புலிகளின் ஆலோசகர் பாலா அண்ணை காலமான செய்தி கேட்டு பலரும் வேதனைப்பட்டனர். வோல்தம்ஸ்ரோவில் புடைவைக் கடைக்கு வந்த ஒருவர் கடையில் வேலை செய்து கொண்டிருந்த நடுத்தர வயதுப் பெண் தலைவாராது, பொட்டின்றி சோகமயமாக நின்றிருந்ததைப் பார்த்து, ஆர்வம் பொறுக்காது பாலா அண்ணை என்ன உங்களுக்கு சொந்தமோ என்று யதார்த்தமாகக் கேட்டிருக்கிறார். அதற்கு மிக உணர்ச்சி வசப்பட்ட பணியில் இருந்த பெண் அவர் தமிழர்களுக்கெல்லாம் சொந்தம் என்றெல்லாம் விளக்கமளித்தார்.

தீபம் தொலைக்காட்சியும் தனது பங்குக்கு பாலா அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தியது. தன்னார்வக் கவிஞர் சுதுமலைக் கவிஞர் ராஜமனோகரன் தொலைக்காட்சியில் தோண்றி தமிழ், விடுதலை, என்று பெரிய மைலேஜ் செய்தார். மூன்று நாட்கள் துக்க தினம் அனுஸ்டிக்க வேண்டும் என்று அன்புக் கட்டளையும் இட்டார். பிரசங்கத்தை பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்க எனக்கு மயிர் சிலிர்த்தது. அடுத்தநாள் இருந்த birthday party functionயை cancel பண்ணினேன். கவிஞரில் எனக்கிருந்த மதிப்பு ஒரு படி உயர்நது. பல பொது விழாக்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

அடுத்த நாள் எனது பள்ளி நண்பன் சொன்ன செய்தி என்னை தூக்கி வாரிப் போட்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கலைநிகழ்ச்சி அல்ல Dinner & Danceல் சுதுமலைக் கவிஞர் ராஜமனோகரனும் சொலிசிட்டர் ராஜகாரியரும் பிரசன்னமாகி இருந்தனராம். ஊருக்குத்தான் உபதேசம் உமக்கில்லை சுதுமலைக் கவிஞரே.

## தமிழகத்தில் இருந்து இலங்கையின் இரு தரப்புக்கும் ஆயுத விநியோகம்

இலங்கையில் மீண்டும் யுத்தத்தில் ஈடுபட்டு உள்ள இலங்கை அரசுக்கும் வி.புலிகளுக்கும் தமிழகத்தில் இருந்து ஆயுத விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது என்ற சந்தேகம் தலைதூக்கி உள்ளது. இரு வெவ்வேற சம்பவங்களில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் செல்ல வேண்டிய ஆயுதங்களை தமிழக காவல்துறையினர் கைப்பற்றி உள்ளனர்.

டிசம்பர் முற்பகதியில் மதுரையில் 40 பெட்டி வெடிபொருட்களுடன் சிக்கிய வாகனம் தூதுக்குடி துறைமுகத்திற்கூடாக இலங்கை கடற்படைக்கு அனுப்புவதற்காக எடுத்து வரப்பட்டதாக தெரியவந்துள்ளது. மஹாராஸ்டிராவில் இருந்து கொண்டு வரப்பட்ட இந்த வெடிபொருட்கள் இலங்கைப் படையினருக்கு அனுப்பப்படுவதற்கான அனுமதிப் பத்திரத்தை கொண்டிருந்ததை தமிழக பொலிசார் உறுதிப்படுத்தி உள்ளனர். இது தொடர்பாக தாம் இலங்கை அரசுடன் தொடர்ப கொள்வதாக மத்திய அரசு தமிழக அரசுக்கு உறுதியளித்து உள்ளது. மீண்டும் இலங்கை நிலவரங்கள் தமிழகத்தின் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ள நிலையில் இந்த ஆயுத விவகாரம் பற்றி தமிழக அரசு மிகவும் கவனமெடுத்து உள்ளது.

மற்றுமொரு சம்பவத்தில் கேரளாவில் இருந்து 30 பெட்டி gelex boosters உடன் வந்த வாகனம் சிவகங்கை மாவட்டத்தில் விபத்தக்கு உள்ளானது. இப்பொருட்கள் ராமேஸ்வரத்தினூடாக வி.புலிகளுக்கு அனுப்பி வைப்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்காலம் என தமிழக காவல்தறையினர் சந்தேகிக்கின்றனர். இப்பகுதியில் ஆயுதக் கடத்தல்காரர்களின் செயற்பாடகளும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இந்தியக் கடற்படையினர் ரொக்கட் போன்ற ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றது.

உண்மைகள் உறங்குவதில்லை.

# அவுஸ்திரேலியா வி.புலிகளைத் தடை செய்வது பற்றி ஆராய்கிறது



அவுஸ்திரெலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டோனருடன் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மார்கிரட் பெக்கிற்


அவுஸ்ரேலிய அரசும் வி.புலிகளைத் தடை செய்வது பற்றி ஆலோசித்து வருவதாக அதன் வெளிவிவகார அமைச்சர் அலெக்சான்டர் டோனர் லண்டனில் தெரிவித்து உள்ளார். பிஜியில் ஏற்பட்ட இராணுவக் கிளர்ச்சியை அடுத்து பிஜியை பொதுநலவாய நாடுகளில் இருந்து தற்காலிகமாக நீக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட Commonwealth Ministerial Action Group (CMAG) கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். தமிழ் பொது அமைப்புகளின் பெயரில் வி.புலிகள் நிதி சேகரிப்பது பற்றி அவுஸ்திரேலிய உளவுப்பிரிவினர் கண்காணிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

லண்டனில், “Ideas as weapons: Meeting the ideological challenge of extremism,” என்ற தலைப்பில் பயங்கரவாதம், மற்றும் இஸ்லாமிய பயங்கரவாதம் ஆகியவற்றை ஆய்வு செய்யும் International Institute of Strategic Studies இல் வழங்கிய உரையின் பின்னர் லண்டன் ரைம்ஸ் பத்திரிகை நிருபரால் கேட்கப்பட் கேள்விக்கே அமைச்சர் அலெக்ஸ்சான்டர் டோனர் “We are now considering banning the LTTE,” என்று பதிலளித்தார்.

நவம்பர் 27 மாவீரர் தின உரையில் தமிழீழமே தீர்வு என வி.புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்ததுடன் அதற்கு புலம்பெயர்ந்த மக்களிடம் நிதிப் பங்களிப்பையும் கேட்டிருந்தார். ஆனால் அண்மைக்காலமாக சர்வதேச நாடுகள் வி.புலிகளின் நிதி சேகரிப்பினை கடுமையாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், கனடா என்பன விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ளன. இப்பட்டியலில் அவுஸ்ரேலியாவும் வெகு விரைவில் சேரலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

வோசிங்டன்போஸ்ட் தனது டிசம்பர் 17 ஆசிரியர் தலையங்கத்தில் “A successful peace accord cannot be reached in Sri Lanka until the financial support for the terrorist Liberation Tigers of Tamil Eelam can be altogether strangled.” வி.புலிகளின் நிதி ஆதரவுகள் நிறுத்தப்படாத வரை இலங்கையில் சமாதானம் சாத்திதயமில்லை என்று தெரிவித்துள்ளது.

# ஜேர்மன் விழாவில் பெரியபுராணம்



டிசம்பர் 9ல் சிவத்தமிழ் ஆன்மீகச் சஞ்சிகையின் ஆதரவில் ஜேர்மன் Schwerte-ergste இல் பரிசளிப்பு விழாவும், த புவனேந்திரனின் மணிவிழாவும் நடைபெற்றது. நூலகவியலாளர் என். செல்வராஜா இதில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

சேக்கிழார் பெருமான் 12ம் நூற்றாண்டில் பாடியருளிய 4,281 பாடல்களில் அடங்கிய பெரியபுராணம் மேற்குலகின் முதலாவது முழுமையான மொழிபெயர்ப்பாக வெளிவந்துள்ளது. 35ஆண்டுகால ஆராய்ச்சியின் பயனாக Robin McGlashan என்ற ஆங்கிலேய கிறிஸ்தவ மதப் போதகர் இவ்வரிய படைப்பினை 417 பக்கங்களில் இங்கிலாந்தில் வெளியிட்டுள்ளார். என்ற தகவல்களை அங்கு உரையாற்றிய என் செல்வராஜா குறிப்பிட்டார்.

5000 ஆண்டுப் பழமையான தமிழ் அன்னையிடமிருந்து 35 ஆண்டுகளாகத் தான் கடனாகப்பெற்றதில் ஒரு சிறு பங்கையாவது மீளவழங்க வேண்டும் என்ற நோக்கில் இதைத் தன் ஐரோப்பிய நண்பர்களுக்காகத் தான் உருவாக்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில் குறிப்பிடுகையில், ஆசியாக் கண்டத்தில் இத்தகைய செழுமையான சைவமும் தமிழும் களிநடம் புரிந்த வேளையில் தாங்கள் இவையொன்றையும் அறியாது, ஐரோப்பிய தேசங்களில் நாகரிகமடையாத நிலையில் வாழ்ந்திருந்ததாகத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

செல்வராஜா மேலும் குறிப்பிடுகையில், கடந்த நூற்றாண்டுகளில் பெஸ்கி, கோல்ட்வெல், போப், போன்ற கிறிஸ்தவ மதபோதகர்கள் தமிழுக்கு ஆற்றிய அளப்பரிய தொண்டுகளை வாசித்து அறிந்திருந்த தனக்கு 21ம் நூற்றாண்டில் அத்தகையதொரு பேரறிஞரின் தரிசனம் கிடைத்ததையிட்டுப் பெருமைப்படுவதாகத் தெரிவித்தார். The History of the Servants of the Lord Siva என்ற நூலின் வெளியீடு எவ்வாறு ஐரோப்பிய சமூகத்தைநோக்கித் தன் அறிவொளியைப் பாய்ச்சுகின்றதோ. அவ்வாறே சிவத்தமிழ் காலாண்டிதழும் புலம்பெயர்ந்து ஐரோப்பிய மண்ணில் வாழ்கின்ற ஈழத்தமிழர்களுக்கும் அவர்களுடைய இரண்டாம் தலைமுறையினருக்கும் ஆன்மீக ஒளியைப் பாய்ச்சுகின்றது என்று ஒப்பிட்டு உரையாற்றினார்.

சிவத்தமிழ் வெளியீட்டு நிகழ்வும், பரிசளிப்பும், த.புவனேந்திரன் மணிவிழா நிகழ்வும் நாதஸ்வரக் கச்சேரியுடன் ஆரம்பித்து, நடனம், சிறுவர் நிகழ்ச்சிகள், வயலின் இசை, பண்ணிசைப் பாடல்கள் என்பனவற்றுடன் இனிதாக நடந்தேறியது.

(The History of the Servants of the Lord Siva என்ற Robin McGlashan அவர்களது நூலைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்புகொள்ளவும். Trafford Publishing (UK) Ltd., 9 Park End Street, 2nd Floor, Oxford, United Kingdom, OX1 1HH. மின் அஞ்சல்: info.uk@trafford.com. நூலின் ISBN இலக்கம்: 1-4120-7914-4.)

## யாழ் ஆயரின் அரசியல் செய்தியாகிய நத்தார் வாழ்த்து

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அரசையும் வி.புலிகளையும் சர்வதேச சமூகம் கடுமையாகக் கையாள வேண்டும் என்று யாழ் ஆயர் தோமஸ் சௌந்திரநாயகம் தனது நத்தார் செய்தியில் வலியுறுத்தியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் தின செய்தியில் மக்கள் அனைவருக்கும் அமைதியையும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் பாதுகாப்பையும் கொண்டுவரும் விழாவாக இந்த கிறிஸ்மஸ் விழா அமைய வேண்டும் என வாழ்த்தியுள்ளார்.

அதேவேளை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்களான நோர்வேயும் மற்றும் இணைத்தலைமை நாடுகளும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் கடின போக்குடன் கையாள வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அவர் வடக்கில் உள்ள மக்கள் மோசமான ஒரு போர் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளமை குறித்து தமது வருத்தத்தையும் கவலையையும் வெளியிட்டு உள்ளார். நாட்டின் இரு பெரும்பான்மைக் கட்சிகளும் எத்தகைய ஒரு தீர்வைத் தமிழ் மக்களுக்குத் தரப்போகின்றன என்பது குறித்த தமது ஐயப்பாட்டையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரையும் அதன் வழியிலான தீர்வையும் அரசு முன்னெடுக்க விளைகின்ற அதேவேளை மாவீரர்தின நிகழ்வு உரையின் மூலம் வி.புலிகளின் தலைவர் வெளியிட்டிருக்கும் கருத்துக்களும் போரை நாடுவதாக அமைகின்றது எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பதையும் தமது கிறிஸ்மஸ்த தின செய்தியில் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார். (தகவல் பிபிசி)

## ஆசியான் விளையாட்டுக்களில் கபடி! கபடி!! கபடி!!!

ஆசிய நாட்டவர்களிடையே மினி ஒலிம்பிக் விளையாட்டாகக் கருதப்படும் ஆசியான் விளையாட்டுப் போட்டிகளில் இவ்வாண்டு இந்தியர்களின் கபடி ஆட்டமும், மலேசிய தாய்லாந்து மக்களின் செபக் டக்ரொ எனப்படும் வலைப் பந்தாட்டமும், ஜப்பானியரின் கராத்தே போன்ற வூசு ஆட்டமும் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இதனால் ஆசியான் விளையாட்டு போட்டிகளில் பிரதேச தனித்தனத்துவம் பேணப்படுவதை நிர்வாகம் உறுதிப்படுத்தி உள்ளது. உலக நாடுகளில் இருந்து அங்கு குவியும் பார்வையாளர்களுக்கு இதுவொரு வரப்பிரசாதமாக அமைய உள்ளது. ஆசியாவின் ஒலிம்பிக் என்று வர்ணிக்கப்படும் ஆசியான் விளையாட்டுக்கள் தென்னாசிய, தென் கிழக்காசிய நாடுகளிடையே அதிக கவன ஈர்ப்பை அண்மைக் காலத்தில் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் தமிழரின் அபிமானத்திற்குரிய சிலம்பமும் இவ்விளையாட்டுகளில் அறிமுகப்படுத்தப்படலாம். இதற்கு ஏதுவான நடவடிக்கைகளில் அனைத்திந்திய சிலம்பச் சங்கம் ஈடுபடுவதாகவும் அறியமுடிகின்றது.



## இலங்கையில் சிக்கன் குனியாவினால் 1,00,000 பேர் பாதிப்பு

நுளம்பினால் காவப்படும் சிக்கன் குனியா நோயினால் இதுவரை 1,00,000 இலங்கையர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர். டெங்கு காய்ச்சலையொத்த இந்த நோயினால் மக்கள் அன்றாடம் பாதிக்கப்பட்டு வருவதாக மருத்துவ அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

தீவிரமான காய்ச்சலும், மூட்டுக்களில் வலியும், தலையிடி, வாந்தி ஆகியனவும் இந்நோயால் பாதிப்பவர்களை ஒன்றுசேர்ந்து வாட்டி வதைக்கின்றன. டெங்கு காய்ச்சல் போன்று இந்நோய்க்கும் இதுவரை மருந்தேதும் கண்டறியப்படவில்லை. வலி நிவாரணிகளான பனடோல், பரசெற்றிமோல் போன்றவற்றை நம்பியே இலங்கை வைத்தியசாலைகள் உள்ளன. இலங்கையின் அனைத்து ஊர்களிலும் இந்நோயாளர்கள் காணப்படுவதாக அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

கடந்த நவம்பர் 24இலேயே இலங்கை அரசு இப்பெருநோயின் பீடிப்பை அதிகாரபூர்வமாக உறுதிசெய்திருந்தது. உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் என்ற பயத்தில் ஆரம்பத்தில் அரசு மௌனம் காத்து வந்தது. வடக்க கிழக்கில் போக்குவரத்துத் தடையினால் போதிய வலி நிவாரணிகள் கையிருப்பில் இன்றி சிக்கின் குனியாவினால் பீடிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதிக அவஸ்தைப்படுவதாக அறியமுடிகின்றது.

3ம் பக் தொடர்ச்சி

# சதாம் உஷேனின் தூக்குத் தண்டனை:



1991ல் சதாம் உஷேன் குடும்பத்தினருடன்

சவுதி அரேபியா கண்டித்துள்ளது. இந்திய இடதுசாரிக் கட்சிகள் எல்லாமே வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளன. இலங்கையில் மட்டக் கிழப்பில் தூக்குக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றதோடு புஸ்சின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபை, ஈராக் மேல் முறையீட்டு நீதிமன்றத்தைக் கண்டித்துள்ளது. மேல் முறையீட்டு நீதிமன்றம் வழக்கை மீளவிசாரிக்க உத்தரவிட்டிருக்க வேண்டும் என்று அது கூறியது. ஈராக் உச்ச நீதிமன்றத்தின் சதாம் உஷேன் மேலானதும் மற்றும் அவரோடு சேர்ந்த ஏழுபேர்களது விசாரணையானது, அதிக தவறுகள் நிறைந்ததும் பாரபட்சமானதுமாகும், அளவுக்கு மிஞ்சிய அரசியற் தலையீடுகளினால் நீதிமன்றம் சுயாதீனமாக இயங்காததோடு மற்றய குறைபாடுகளையும் கொண்டிருந்தது என்று மத்தியகிழக்குப் பிராந்தியத்திற்கான சர்வதேச மன்னிப்புசபையின் முகாமையாளர் மல்கம் சிமாட் கருத்துக் கூறியுள்ளார்.

சதாம் உஷேனைத் தூக்கியதால் ஈராக் மக்களின் அவலங்களில் இம்மியளவும் குறையப் போவதில்லை. அது பயங்கர வாதத்தை, பழிவாங்கலை, வன்மம் சாதிப்பதை, பயமுறுத்தல்களை குற்றங்களையே மேலும் பெருக்கிவிடும். அது ஈராக் சமூகத்தை சுன்னி முஸ்லீமென்றும் ஷியா முஸ்லீமென்றும் பிரிவினை செய்து ஆளுபவர்களுக்கு ஏதுவான சூழலை உண்டாக்குவதற்காகத் திட்டமிட்டே செய்யப்பட்டது.

குற்றவாழிகளைத் தூக்கிலிடுவதாலோ தண்டிப்பதாலோ சமூகத்தில் நீதி நிறைந்து வழிந்தோடுவதில்லை. குற்றங்களைப் படைக்கும் பற்றாக்குறைப் பொருளாதாரத்தை நிவர்த்திசெய்து அத்தியாவசியப் பொருட்களை விலைக்கு வாங்கும் சக்தியற்ற பெரும்பான்மைக் குடிமக்களுக்கு விலைக்கு வாங்கும் சக்தியைக் கொடுத்து உயிர் தப்பிப் பிழைக்கும் மட்டத்திற்காவது மக்கள் சக்தியை உயர்த்துவதன் மூலம் சமூகத்தின் அசமத்துவத்தைப் போக்கி ஓரளவுக்காவது உயர்வு தாழ்வைப் போக்கினால் மட்டும்தான் சாதிக்கக் கூடியதாக இருக்கும்.

சதாம் உஷேனின் தூக்கானது மானிடசம்பிரதாய எல்லையை மீறிய ஒரு செயலாகும். புஸ்சால் ஏன் மிலோசோவிச்சைச் செய்ததுபோல சதாம் உஷேனைச் ஹாக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டுவந்து இந்த விசாரணையை நடாத்த முடியவில்லை. ஏனெனில் ஈராக்கை ஆக்கிரமித்ததற்காக புஸ்சையே முதலில் சர்வதேச நீதிமன்றத்தின் முன்பு கொண்டு வரவேண்டும். சதாம் உஷேனைத் தண்டிப்பதற்கு ஈராக் தொழிலாளர்களைத் தவிர எந்த ஏகாதிபத்திய நெட்டூரர்களுக்கும் உரிமை கிடையாது.

1982 இன் பின்பு சதாம் உஷேன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் மேற்கு நாடுகளதும் செல்லப் பிள்ளையாகவே விளங்கினார். 1979 இல் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி ஏற்படுத்தப்பட்ட ஈரானிய அயொத்துல்லா ஹொமைனி ஆட்சியை ஸ்திரமடையவிடாமற் தடுப்பதற்கு அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட்ட நாடுகள் கண்டு கேட்டிராத ஒத்தாசையை சதாம் உஷேனுக்கு வழங்கியது. பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்றன ஆயுதங்களை வழங்கின. இது 1987-88 இல் ஹலாபஜாவில் குர்தீஸ் மக்கள் மீது நச்சுவாயுக் குண்டுகள் (மேற்கு நாடுகள் கொடுத்தது) பிரயோகிப்பது வரை சென்றது.

சதாம் உஷேனைத் தூக்கிய அதே தண்டனையை இந்த மேற்குநாட்டு ஆயுத வியாபாரிகளுக்கும் அவர்களுக்கு விற்பனை வழிகளை ஏற்படுத்திக் கொடுத்த அன்றய மேற்குநாடுகளின் ஆட்சியில் இருந்தவர்களுக்கும் வழங்க வேண்டும். ஆப்போது சதாம் தன்னை இஸ்லாமிய சோஷலிசவாதி என்று சொல்லிக்கொண்டு கொம்யூனிச வாதிகளைகயும் தொழிற்சங்க வாதிகளையும் கொன்ற உலக ஏகாதிபத்தியங்களின் செல்லப் பிள்ளை. எங்கே தான் அம்பலப்பட்டு விடுவேன் என்பதாலலேயே அமெரிக்க ஏகாதிபத்தியம் சதாம் உஷேனைச் சர்வதேச நீதி மன்றத்தில் விசாரியாது ஈராக்கிலே விசாரித்தது. குவைற் ஆக்கிரமிப்பை அடுத்து ஏகாதிபத்தியங்கள் விதித்த பொருளாதாரத் தடையினால் 1.5 மில்லியன் மக்கள் பெரும்பான்மை குழந்தைகள் பட்டினியாலும் நோயினாலும் மடிந்தார்கள். குவைற் ஆக்கிரமிப்பை அடுத்து சதாம் உஷேனை ஆட்சி இறக்கினால் ஈரானின் ஸ்லாமிய ஆட்சி பலம்பெற்றுவிடும் என்று கூறியே சதாம் அன்று ஆட்சியிலிருந்து வீழ்த்தாது காப்பாற்றப்பட்டார்.

சதாம் உஷேன் 16 யூலை 1979ல் ஆட்சிக்கு வந்தார். அவர் ஓர் பின் தங்கின நாட்டில் ஏகாதிபத்தியங்களுக்கு



இடையே ஏற்பட்ட முட்டிமோதல்களின் விளைவாகவே ஆட்சிக்கு வந்தார். அவர் ஈராக்கின் எண்ணைக் கிணறுகளில் கட்டுக்கடங்காத வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து ஏற்பட்ட போது தொழிலாளர்களுக்கு எதிராகவே ஆட்சிக்குக் கொணரப்பட்டார்.

இருந்த போதும் அவர் எண்ணைக் கொம்பனிகளை அரச உடமையாக்கி அதனால் வந்த சமூகச் செல்வத்தால் இலவச வைத்திய வசதி, இலவசக் கல்வி, சமூக சேவைகள், மற்றும் மேற்கட்டுமானங்களை ஏற்படுத்தினார். வெளிநாடுகளில் படிக்க விரும்பும் தகுதிவாய்ந்த எல்லா மாணவர்களையும் அரசாங்க புலமைப் பரிசில்கள் கொடுத்தார். அவர் ஈராக்கை இஸ்லாமிய அடிப்படைவாதக் காலாவாதியாகிப் போன நடைமுறைகளை ஈராக்கில் இருந்து அகற்றினார். அவர் ஈராக்கை மதசார்பற்ற மதசமத்துவ நாடாகப் பிரகடனப் படுத்தினார். உண்மையில் ஈரான், ஈராக் யுத்தத்திற்கு முன்பு ஈராக் ஒரு நவீன நாட்டுக்குரிய அனேக பண்புகளைக் கொண்டிருந்தது. அவர் அன்றய சோஷலிச முகாம் நாடுகளோடு பாரிய வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்திருந்தார். முழு மத்தியகிழக்கு நாடுகளிலும் ஆகக்கூடிய வாழ்க்கைதரம் ஈராக்கிலேயே இருந்தது.

இந்த நீதி விசாரணையானது நூரென்பெர்க் வழக்கு விசாரணை போல் நடவாமல் நாசி முறையில் பொம்மை நீதிபதிகளின் முன் ஏற்கனவே தீர்மானித்தபடி மரணதண்டனை வழங்கப்பட்டது. ஆனால் இன்றைய சதாம் உஷேனை விசாரித்த நீதிமன்றம் நூற்றுக்கு நூறுவீதம் ஈராக் மக்களால் ஆனதென்று பிற்போக்கு ஊடகங்கள் கூறுகின்றன. அவை உஷேன் சர்வாதிகாரி, கொலைகாரன், மனித உரிமைகளை மீறியவர் என்று எழுதி தமது பிற்போக்குத் தனத்தை பிரகடனப்படுத்துகின்றன.

ஈராக் ஆக்கிரமிப்புக்கு முன்பு சொன்ன உஷேன் வெகுசன அழிவு ஆயுதங்கள் வைத்திருக்கிறார், அல்கையிடாவுடன் தொடுர்பு, செப்டம்பர் 11 உலக வர்த்தகக் கட்டிட அழிப்பு போன்ற பொய்க் குற்றச்சாட்டுகளை நாம் ஒருதடவை நினைவு கூரவேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மண்கொள்ளையைத் தடுக்கும் எவருக்கும் எதிர்காலத்தில் இதுதான் நடக்கும் என்று எச்சரிப்பதற்காகவே அந்தத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு துடிதுடித்துத் தூங்கும் காட்சி வீடியோபடமாக்கப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டது. இந்தத் தூக்குத் தண்டனை மூலம் அமெரிக்க ஆக்கிரமிப்புத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை கொல்லப்பட்ட 3000 க்கும் மேலான அமெரிக்க இராணுவத்தினரின் செய்தி அமெரிக்க மக்களுக்குத் தெரியாமற் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சீனாவுக்கான கடன் கொடுப்பனவு 200 பில்லியன் டொலர்களாகும். சீனாவிடம் உள்ள டொலர் இருப்பு 1000 பில்லியின் டொலர்களாகும். வரலாற்றில் முதன்முதலாக இம்முறை தான் உலக வர்த்தகமானது 70 வீதம் யூரோவால் செய்யப்பட்டுள்ளது. இப்படி அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக ஆளுமையை இழக்கும் மரணவலிப்பின் எதிரோலியாகவே சதாம் உஷேனைக் கொல்வதன் மூலம் அற்ப திருப்தியைப் பெற்றுள்ளது.

மக்களைச் சுரண்டி ஒடுக்கிய வீரபாண்டிய கட்டபொம்மன், திப்புசுல்த்தான் போன்றவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய அக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியதால் சுதந்திர வீரர்கள் ஆனார்களோ அதேபோலவே சதாம் உஷேனும் அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடியதால் சுதந்திரவீரனாகக் கூடும்.

ஜக் சிராக்குடன் சாதாம் உஷேன்



**உண்மைகள் உறங்குவதில்லை.**

# சர்ச்சையைக் கிளப்பிய சுனாமி தொலைக்காட்சி நாடகம்



தாய்லாந்தின் பின்னணியில் பீபீசீ நிறுவனமும் எச்.பீ.ஓ. திரைப்பட நிறுவனமும் இணைந்து உருவாக்கி டிசம்பர் 17ல் காட்சிப்படுத்திய Tsunami - The Aftermath என்ற தொலைக்காட்சி நாடகம் லண்டனில் அரசியல் வாதிகள் இடையேயும், நிவாரண உதவி வழங்கும் நிறுவனங்களிடையேயும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இச்சர்ச்சை இந்நாடகத்தின் படப்பிடிப்பின் போதே கிளம்பியது குறிப்பிடத்தக்கது.

23,000 ஹீரொஷிமா அணுகுண்டுகளின் சக்தியைப் பெற்றதும், 226,000 மக்களை 13 நாடுகளில் சில நிமிடங்களுக்குள் காவு கொண்டதுமான ஒரு பேரழிவை அது நிகழ்ந்து இரண்டாண்டுகளுக்குள் கற்பனை கலந்த நாடகமாகத் தயாரிக்கலாமா என்ற தார்மீக எதிர்ப்பும் அரசியல்வாதிகளையும், நிவாரண உதவியாளர்களையும் சாடும் வசனங்களுமே Tsunami - The Aftermath என்ற இந்நாடகத்தின் சர்ச்சைக்குக் காரணமாகி உள்ளன.

## Tsunami - The Aftermath

இந்நாடகம் சுநாமியின் பாதிப்பை பொருளாதார ரீதியிலோ, மீள ஆவணப்படுத்தும் நோக்கிலோ அணுகாமல் பாதிக்கப்பட்ட, சுநாமியுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட மக்களின் உணர்வுக் கொந்தளிப்புகளை வெளிக்காட்டும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டு உள்ளதாக அதன் தயாரிப்பாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானிய தூதரக அதிகாரி டோனி, சுநாமியால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து நாட்டவரான தான், பாதிக்கப்பட்ட மக்களின் நிலத்தில் ஹோட்டல் கட்ட அவசரப்படும் முதலீட்டாளர், அவலப்படும் மக்களின் நிவாரணத்தை உடனடியாக வழங்காது வாகனங்களில் வைத்துக்கொண்டு கூட்டங்களில் நேரத்தைச் செலவிடும் நிவாரண நிறுவனங்கள், தகவல் தேட வந்த பத்திரிகையாளர், இவர்களுக்கிடையே சுநாமியை வைத்து அரசியல் லாபம் தேட முனையும் அரசியல் முதலைகள் என்று பல்வேறு பாத்திரங்கள் இந்நாடகத்தில் யதார்த்தமாக உலவுகின்றன.

அபி மோர்கன் எழுதி தாய்லாந்தில் படம் பிடிக்கப்படும் இந்நாடகத் தொடரில் மனதைக் கவரும் கிராப்பிக்ஸ் செயற்கைக் காட்சிகளையோ, சினிமாத் தனங்களையோ எதிர்பார்க்கக் கூடாது என்று முன்கூட்டியே தயாரிப்பாளர்கள் ரசிகர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

# ஹர்மொன்ட் வேர்த் தடுப்பு முகாமில் இருந்து 150 பேர்வரை விடுவிக்கப்படுவர்



ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற ஹார்மொன்ட் வோர்த் தடுப்பு மையம்

பிரித்தானிய குடிவரவுத் தடுப்பு முகாம்களில் இருந்து 150 குடிவரவுக் குற்றவாளிகள் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளனர். பிரித்தானியாவில் பெரியதும், சர்ச்சைக்குரியதுமான ஹார்மொன்ட் வோர்த் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டோரிடையே நவம்பர் 29ல் இடம்பெற்ற கலவரத்தை அடுத்து, அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட உள்ளோருக்கு இடமொதுக்கும் வகையில் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹீத்ரோ விமான நிலையத்திற்கு அருகிலுள்ள ஹார்மொன்ட் வோர்த் தடுப்பு முகாமில் இடம்பெறும் சீர்கேடுகள் பற்றிய அறிக்கை வெளியாகியதையொட்டி அங்கிருந்த 484 கைதிகளில் பெரும்பான்மையானோர் தமது அவலம் மிகுந்த வாழிடச் சூழல் பற்றிக் குரல் எழுப்பும் வகையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அதிகாரிகளுக்கும் தமக்கும் இடையேயுள்ள சுமுகமற்ற சூழலை வெளிக்காட்டும் பொருட்டு, உடற்பயிற்சி மைதானத்தில் தீமூட்டித் தம் ஆர்ப்பாட்டத்தை வெளி உலகிற்குத் தெரியவைத்தனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக கைதிகள் அங்கிருந்து உடனடியாக வேறு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

இம்முகாமில் இருந்தோரில் மூன்றில் ஒரு பங்கினர் வெளிநாட்டுப் பிரஜைகளாவர். இவர்களில் இலங்கையரும் அடங்குவர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கைதிகளோ அதிகாரிகளோ காயப்படவில்லை எனவும், முகாமின் சுற்று மதில் பாதுகாப்பாக உள்ளதாகவும், கைதிகள் எவரும் தப்பிச்செல்லவில்லை எனவும் முகாம் நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது.


விளம்பரத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் தேவை

உங்களுக்கு:


*உகந்த நேரத்தில்

*சுயதீனமான வேலை

*பகுதி நேரமாகவோ

*முழு நேரமாகவோ

தொடர்புகளுக்கு: 020 8279 0354

# லண்டன் போக்குவரத்தின் எதிர்காலம்

புகை வண்டிப் பயணிகளின் எண்ணிக்கை 45சதவீதத்தால் அதிகரிக்கும். வீதிப் போக்குவரத்து 25வீதம் மேலதிக நெரிசலை எதிர்நோக்கும். பஸ்போக்குவரத்துக்கான காத்திருப்பு நேரம் 15 வீதமாக அதிகரிக்கும். தற்போதைய பொதுப் போக்குவரத்து நிலைமை சீர்செய்யப்படாவிட்டால் இதுவே லண்டன் மாநகரம் இன்னும் 20 ஆண்டுகளில் எதிர்கொள்ளப்போகும் பிரச்சினையாகவிருக்கும் என மேயரிடம் இருந்து வந்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

அரசினால் தற்போது அறிவிக்கப்பட்டு உள்ள 10 பில்லியன் ஒதுக்கீடு 40 வீத போக்குவரத்து உயர்வை சமாளிக்க முடியாது உள்ளது. தற்போதுள்ள 1 மில்லியன் தொழிலாளர் எண்ணிக்கை இன்னும் 20 ஆண்டுகளில் 5.5 மில்லியனாக அதிகரிக்கும் போதே இந்தப் பிரச்சினையை படிப்படியாக எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையை சமாளிக்க உடனடியாக லண்டன் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்று ”போக்குவரத்து 2025” என்ற 86 பக்க அறிக்கை வலியுறுத்தி உள்ளது.

# பருமனான உடல் புற்றுநோய் அபாயம்

தற்போதைய நிலையில் 2010ம் ஆண்டு வாக்கில், உடற்பருமன் (Obesity) கொண்டோரிடையே புதிதாக 12,000 புற்றுநோயாளர்கள் இனம் காணப்படுவார்கள் என்று பிரித்தானிய மருத்துவ ஆய்வுகள் எச்சரித்துள்ளன. தற்போதைய நிலையில் பிரிட்டனில் உடல் பருமன் கொண்டோரின் எண்ணிக்கை அபாயகரமான நிலைக்குச் சென்று கொண்டுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட சுகாதாரத் திணைக்கள புள்ளி விபரங்களின் படி 2003இல் 24.2 மில்லியன் அளவுமீறிய உடல் பருமன் கொண்டோர் பிரிட்டனில் உள்ளார்கள் எனவும் 2010அளவில் இவ்வெண்ணிக்கை 14சதவீதம் (27.6 மில்லியனாக) அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப் படுகின்றது. இதனால் புற்றுநோய்க்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையும் நான்கு சதவீதம் அதிகரிக்க வாய்ப்புண்டு என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பிரித்தானிய புற்றுநோய் ஆய்வகம் வெளியிட்டு உள்ள மற்றொரு அறிக்கையில் அடுத்த நான்கு ஆண்டுகளில் மட்டும் உடல் பருமன் தொடர்பான புற்று நோயாளர்களின் எண்ணிக்கை 10,500இலிருந்து 12,000ஆக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. மார்பக, கர்ப்பப்பை புற்று நோய்கள் பெரும்பாலும் அதீத கொழுப்புச் சத்து உடலில் தேங்குவதால் ஏற்படுவதாக விஞ்ஞானிகள் தமது ஆய்வுகளின்வழியாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

# பிரச்சினைக்குரிய லண்டன் பாள்ளிகள் திருந்துகின்றன



அண்மைக் காலத்தில் பிரச்சினைக் குரிய லண்டன் பாடசாலைகள் அதிக அபிவிருத்தியை வெளிக்காட்டியுள்ளதாக OFSTED அறிக்கைகள் கூறுகின்றன. குறிப்பிடத்தக்க அளவில் லண்டன் இடைநிலைப் பாடசாலைகள் மோசமான நிலையில் இருந்து நல்ல நிலைக்கு அல்லது சிறப்பு நிலைக்கு உயர்ந்துள்ளதாக டிசம்பர் 4ல் வெளியான இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அண்மைய GCSE பெறுபேறுகளின் அடிப்படையில் 89 சதவீதமான லண்டன் பாடசாலைகளில் A*, C தரத்தை எட்டிய மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. தேசிய மட்டத்தில் இந்த எண்ணிக்கை 2006ல் 73 சதவீதமாகும். 2005ல் 59 சதவீதமான லண்டன் பாடசாலைகளே இத்தரத்தை எட்டியிருந்தன. இதே ஆண்டு தேசிய மட்டத்தில் இது 49 சதவீதமாயிருந்தது.

இந்த வளர்ச்சி லண்டனிலுள்ள ஆரம்பப் பள்ளிகளிலும் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆயினும் பாடசாலைக்கு மட்டம் போடுவோர் எண்ணிக்கை குறையவில்லை என்று இவ்வறிக்கையில் வருத்தம் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உண்மைகள் உறங்குவதில்லை.

# We can help you if you wish to return to Sri Lanka. And assist you further once you are back home.



The International Organization for Migration manages migration in a number of ways. In the UK, IOM helps unsuccessful asylum seekers and irregular migrants return to their home countries by coordinating all their travel arrangements including paying for their flight tickets. Asylum seekers are also eligible for extra ssistance in their countries of origin. To find out if you qualify for IOM's assistance, call 0800 783 2332. *London office*: 020 7233 0001. *Liverpool office*: 0151 225 0142. *Glasgow office*: 0141 548 8116

IOM International Orgnization for Migration
0800 783 2332 - www.iomlondon.org

This programme is co-funded by the European Refugee Fund